# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 9, 2025

Weekly E-paper ● August 9, 2025





## தேர்தலே கள்ளத் தேர்தல்!

சுப. வீரபாண்டியன்

### தமிழும் சமஸ்கிருதமும்!

எழில்.இளங்கோவன்

### பத்து லட்சம்?

தலையங்கம்

### புலம்பெயர்ந்தோர் தொழிலாளர்களே! வாக்காளர்கள் அல்லர்!!

சிற்பி செல்வராசு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 9, 2025

Weekly E-paper • August 9, 2025


# தேர்தலே கள்ளத் தேர்தல்!

சுப. வீரபாண்டியன்

பொதுவாக, தேர்தல்களில் கள்ள ஓட்டுப் போடுவது என்பது பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்போது, தேர்தலே கள்ளத் தேர்தலாக நடக்கப் போகிறதோ என்னும் அச்சத்தை, தக்க சான்றுகளுடன் ராகுல் காந்தி விளக்கி இருக்கிறார்!

அவர் கூறியிருக்கும் செய்திகள், அச்சத்தையும் அதிர்ச்சியையும் தருகின்றன என்பதைத் தாண்டி, தேர்தல் மீதும், ஜனநாயகத்தின் மீதுமே மிகப் பெரும் நம்பிக்கையின் மையைத் தோற்றுவிக்கின்றன. இப்படித்தான் தேர்தல்கள் நடைபெறுகின்றனவோ என்னும் எண்ணத்தையும் ஏற்படுத் துகிறது.

1. பெங்களூரு மத்திய மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட **மகாதேவ்புரா சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 1,00,250 போலி வாக்காளர்கள் உள்ளனர்.**
2. 11,965 வாக்காளர்களின் பெயர்கள் **ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் பதிவாகி உள்ளன.**
3. **போலி முகவரிகளில் 40,009 வாக்காளர்கள் உள்ளனர்.**
4. **சரியான புகைப்படம் இன்றி 4,132 வாக்காளர்கள் உள்ளனர்.**
5. **ஒரே ஒரு அறையுள்ள வீட்டில் 80 வாக்காளர்களும்,** இதேபோன்று மற்றோரு வீட்டில் 46 வாக்காளர்களும் **உள்ளனர்.**
6. **ஒரே முகவரியில் உள்ள பீர் தொழிற்சாலையில் 68 வாக்காளர்கள் உள்ளனர்.**
7. ஒரு குறிப்பிட்ட முகவரியில் அதிகப்படியான வாக்காளர்கள் உள்ளனர். **அப்படி மொத்தம் 10,452 வாக்காளர்கள் பதிவு செய்துள்ளனர்.**
8. **கதவு எண் '0' என எண்ணற்ற வாக்காளர்கள் உள்ளனர்.**
9. **ஒரு நபர் வெவ்வேறுமாநிலங்களில் பல வாக்குச்சாவடிகளில் வாக்காளராக உள்ளார்.**
10. பல வாக்காளர்களின் தந்தை பெயர்கள் **அர்த்தமற்ற ஆங்கில எழுத்துகள் (dfoigoidf) குறிப்பிடப்பட்டுள்ளன.**
11. புதிய வாக்காளர்களை பதிவு செய்வதற்கான **Form 6-ஐ தவறாகப் பயன்படுத்தி 33,692 வாக்காளர்கள் உள்ளனர்.**

இந்த புகார்கள் குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் **ராகுல் காந்தி மக்களை தவறாக வழிநடத்துவதாகவும், தான் சொல்வது உண்மை என அவர் நம்பினால் பிரமாணப் பத்திரத்தில் கையெழுத்திட்டு புகார் அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது**

ஒன்றிய அரசில் இன்று ஆளுங் கட்சியாக இருக்கும் பாஜகவும், தேர்தல் ஆணையமும் வேறு வேறு அல்ல, இரண்டும் ஒன்றுதான் என்பது போன்ற நிலை நாட்டில் ஏற்பட்டிருப்பது எத்தனை பெரிய அவலம் என்பதை மக்கள் உணர வேண்டும்! இப்படித் தேர்தல்கள் நடக்குமானால், இன்னும் ஒரு நூற்றாண்டிற்கும் இங்கு பாஜகதான் ஆளுங் கட்சியாக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை!

பீகாரில் நாற்பது லட்சம் வாக்காளர்கள் திடீரென்று காணாமல் போகிறார்கள். கர்நாடகத்தில் ஒரே தொகுதியில், ஒரு லட்சம் வாக்காளர்கள் புதிதாய் வந்து குதிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வாக்காளர், இந்தியாவில் வெவ்வேறு மாநிலங்களில் வாக்காளராக இருக்கிறார். இது போன்று ஏராளமான குளறுபடிகள்!




ஒரே ஒரு முகவரியில் 80 க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கின்றனர். ஆனால் அந்த வீட்டில் ஒரே ஒரு படுக்கை அறைதான் இருக்கிறது!

இங்கே தரப்பட்டிருக்கும் ஒரு கட்டம் கட்டிய செய்தியில், அந்த விவரங்கள் முழுமையாக உள்ளன.

இவ்வளவுகுளறுபடிகளோடுஒருதேர்தல்நடக்குமானால்,அதனை விட ஜனநாயகத்திற்கு வேறு என்ன அவமானம் இருக்க முடியும்? நாடே கொந்தளித்து எழ வேண்டிய தருணம் இப்போது வந்திருக்கிறது! எந்த ஒரு விவரத்தையும் தேர்தல் ஆணையம் தர மறுத்த சூழலில், 40-50 பேர் ஏறத்தாழ ஆறு மாத காலம், இரவு பகலாகப் பணியாற்றிப் பலவற்றை ஒப்பிட்டுப் பார்த்து, இந்த உண்மைகளை வெளிக் கொண்டு வந்துள்ளனர்.

இப்படி ஒரு கள்ளத் தேர்தல் நடந்தால் என்ன, நடக்காவிட்டால் என்ன என்று விரக்தி அடையத் தக்க நிலையில் இன்றைய இந்தியா இருக்கிறது!

# தமிழும் சமஸ்கிருதமும்!

**எழில்.இளங்கோவன்**

நாக்பூர், காளிதாஸ் சமஸ்கிருத கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் அண்மையில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பகவத், 'இந்தியாவின் அனைத்து மொழிகளுக்கும் தாய் சமஸ்கிருதம்' என்று பேசியிருக்கிறார். இது சரியா? தவறா? பார்ப்போம்.

சமஸ்கிருதம் பார்ப்பனர்களின் மொழியென்று சொன்னாலும்; அது, அவர்களின் நேரடித் தாய் மொழியில்லை. இந்துகுஷ், கைபர், போலன் கணவாய்களின் வழியாக, சிறுசிறு கூட்டங்களாக மாடுகள் மேய்த்துக் கொண்டு சிந்துநதிப் பகுதிகளுக்குள் நுழைந்தவர்கள் ஆரியர்கள். அப்போது அவர்கள் பேசிய மொழி 'ஆர்ய' என்பதாகும்.

ரிக்வேதத்தில் 'அர்ய' என்ற சொல் 88 இடங்களிலும், 'ஆர்ய' என்ற சொல் 31 இடங்களிலும் வருவதாகச் சொல்லும் டாக்டர் அம்பேத்கர், அச்சொல் அம்மக்களின் மொழியடிப்படையில் இருந்ததாகக் கருதுகிறார்.

"குருதித் தொடர்பைப் பொறுத்தவரை ஆரிய இனம் என்று எதுவும் இல்லை. ஆரிய என்பது மொழியைத் தவிர வேறு எதையும் குறிக்கவில்லை" என்று மார்க்ஸ் முல்லர் சொல்வதைக் கவனிக்க வேண்டும். ஆக, ஆரியர்கள் சிந்துநதி நிலப்பகுதிகளில் நுழைந்து வந்த போது அவர்கள் பேசிய மொழி 'ஆர்ய' என்பதுதானேயொழிய, சமஸ்கிருதம் இல்லை. இவர்கள் சிந்துசமவெளியில் நுழைந்த ஆண்டு கி.மு.1500 என்பது அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

சமஸ்கிருதம் என்ற மொழியை இலக்கண அடிப்படையில் செப்னிமிட்டவர் 'பாணினி' என்று சொல்கிறார்கள். பாணினி என்ற பெயர் சொல்லப்படும் போதுதான் சமஸ்கிருதம் என்ற சொல்லே முன்வருகிறது. அவர் சமஸ்கிருதத்திற்கு இலக்கணம் வகுத்த போது அதை எழுத்து வடிவில் எழுதியதாகத் தெரியவில்லை. வேதங்களை மனப்பாடம் செய்து அடுத்தவர்களுக்குச் செவிவழி சொல்லும் முறையில், 'அஷ்டாத்தியாயீ என்ற சமஸ்கிருத இலக்கணநூலை அவர் உருவாக்கியிருக்கிறார். இவரின் வரலாறு, வாழ்ந்த காலம் போன்றவை தெரியவில்லை. ஆனால் அவர் காலம் கி.மு.4ஆம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது.

இப்போது இங்கே ஒரு குழப்பம் ஏற்படுகிறது. சாகுந்தலம், மேகதூதம், ரகுவம்சம் போன்ற காவியங்களைப் படைத்த சமஸ்கிருதப் புலமைமிக்க காளிதாசர் வாழ்ந்த காலம் கி.மு.5 ஆம் நூற்றாண்டு என்று சொல்கிறார்கள். அப்படியானால், சமஸ்கிருதத்திற்கு இலக்கண வளமை செய்த பாணினி கி.மு.4 இல் வாழ்ந்தார் என்றால், அவருக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் (கி.மு.5) எப்படி காளிதாசர் இலக்கணப் புலமையோடு காவியங்கள் பாடினார், என்ற கேள்விக்கு விடை வேண்டும்.

அடுத்து கிரந்தம் என்பது ஒரு மொழியல்ல, அது வடமொழி எழுத்து வடிவம் பெறுவதற்கான ஒரு வரிவடிவம். குறிப்பாக சமஸ்கிருதத்தைத் தமிழில் எழுத கிரந்தம் பயன்பட்டது. பல்லவ கிரந்தம் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இதன் காலம் கி.பி.5 என்பர். இன்னொன்று 'தேவநாகிரி' எனும் எழுத்து வடிவம். சமஸ்கிருதத்தில் இருந்து இந்தி மொழிக்கு வரிவடிவம் கொடுத்தது இந்த தேவநாகிரி எழுத்து வடிவம்தான். இதன் காலம் கி.பி.7 என்று வரையறை செய்கிறார்கள். இன்று கிரந்தம் பின்தள்ளப்பட்டு தேவநாகிரி மூலம் சமஸ்கிருதம், இந்தியை முன்னிலைப் படுத்த நினைக்கிறார்கள்.

ஆரியர்கள் இங்கே வரும்போது சமஸ்கிருதம் பேசவில்லை. அவர்கள் பேசிய ஆரிய மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. பாணினி சமஸ்கிருதத்தைத் தருவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் காளிதாசர் காவியங்கள் பாடிவிட்டார் என்பது புதிராக இருக்கிறது. சமஸ்கிருதத்தின் கிரந்தம்/தேவநாகிரி ஆகிய எழுத்துவரிவடிவம் கி.பி. காலத்தவை எனும்போது எப்படி சமஸ்கிருதம் எழுத்துரு பெற்ற தொன்மையான மொழி, மொழிகளுக்கெல்லாம் தாயாக இருக்க முடியும், என்பது நம்முடைய கேள்வி!

இனி தமிழின் தொன்மை குறித்துப் பார்ப்போம். தமிழின் முதல்நூல் 'தொல்காப்பியம்'. இதன் காலத்தை கி.மு 2000 ஆண்டுகளுக்கு முந்தையது என்று சாமி.சிதம்பரனார் கூறுகிறார். வெள்ளைவாரணார், மறைமலையடிகளார் போன்ற அறிஞர் பெருமக்கள் தொல்காப்பியம் கி.மு.5000 ஆண்டுகளுக்கு முன்னது என்று கணிக்கிறார்கள். கீழடியில் கிடைத்த பானை ஓடுகளின் 'தமிழி' என்ற 'தமிழ்பிராமி'யின் தமிழ் எழுத்து வடிவத்தால் தமிழர்களின் எழுத்தறிவின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டுகளைக் கொண்டது என்று கீழடி ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் கூறுகிறார்.

இப்போது நாம் தொல்காப்பியத்தைக் கீழடி கால எல்லையில் வைத்தாலும்கூட, தொல்காப்பியர் தன்நூலில் 'என்ப' 'என்மனார்' 'என்மனார் புலவர்' 'மொழிப' 'யாப்பென மொழிப' 'யாப்பறி புலவர்'– 'தோலென மொழிப' 'தொன்மொழிப் புலவர்' என்று அவர் தமக்கு முன்புள்ளோர் கூறியதாகக் குறிப்பு தருகிறார். தொல்காப்பியத்திற்கு முன்பே எழுதப்பட்டு, மறைந்து போன முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, பெருங்கலி, வெண்டாளி, கூத்து, சிற்றிசை, பேரிசை நூல்களின் பெயர்களை 'இறையனார் அகப்பொருளுரை'யில் காணமுடிகிறது.

இதன்மூலம் தொல்காப்பியத்திற்கு முந்தைய காலங்களில் தமிழர்கள் எழுத்தறிவு பெற்றவர்கள் என்பது உறுதிபெறுகிறது. இதன் காலம் கி.மு.5000 ஆண்டுகள் என்பது மிகையில்லை. ஐயனாரிதனார் சொல்வதுபோல 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய' மூத்தகுடியும், மொழியும் தமிழ்தான்.

நிறைவாக, சமஸ்கிதம் மொழிகளுக்கு எல்லாம் தாய், அது எல்லா வீடுகளுக்கும் போகவேண்டும் என்று பசப்பித் திரிவதெல்லாம் மொழிஆதிக்கம், வடபண்பாட்டுத் திணிப்பு என்பதனால், தமிழே காலத்தால் மூத்த, முதன்மையான மொழி என்ற பெருமையுடன், வள்ளுவர் சொல்வழி நிறைவு செய்வோம் 'கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' ! ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பத்து லட்சம்?

தமிழ்நாடு அரசு நடைமுறைப் படுத்தியுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தால் சாதிச் சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தில் தகுதிவாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவக் காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்தல் போன்றவைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக மக்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்குகின்றனர் என்பது மக்களுக்கு மிகவும் பயன்தருகின்ற திட்டம்.

இதைப் பொறுக்க முடியாமல் அரசு திட்டங்களுக்கு உங்களுடன் 'ஸ்டாலின்' என்று முதல்வர் பெயர் இருக்கக்கூடாது என்று அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் நிதிமன்றம் போய்விட்டார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அரசியல் கட்சிகளின் சண்டைகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டாம் என்று காட்டமாகச் சொல்லி, சண்முகத்தின் மனுவைத் தள்ளுபடி செய்ததுடன் அவருக்குப் பத்து லட்ச ரூபாய் அபராதமும் விதித்துவிட்டார்.

அதிமுக ஆட்சியின்போது அம்மா உணவகம் - அம்மா சிமென்ட்- அம்மா உப்பு - அம்மா மருந்தகம் - அம்மா குடிநீர்-அம்மா மகப்பேறு சஞ்சீவித்திட்டம் -அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம் என்று முன்னாள் முதல்வரின் பெயரில் திட்டங்களை நிறைவேற்றியதை மறந்துவிட்டாரா சி.வி.சண்முகம்?

கலைஞரால் கட்டப்பட்ட புதிய சட்டமன்றக் கட்டடத்தை மருத்துவ மனையாக்கிய ஜெயலலிதாவின் சிஷ்யர்தானே சண்முகம்.

எதிர்கட்சியை எதிரிக்கட்சியாகப் பார்க்கிறார் எடப்பாடி. சி.வி.சண்முகம் அதற்கு விதிவிலக்கல்ல.

பெயரில் என்ன இருக்கிறது? திட்டங்கள் மக்களுக்குப் பயன்தருகிறதா என்பதைக்கூட அறியாமல் சி.வி.சண்முகம் அவர்கள், தமிழ்நாட்டின் முன்னாள் மந்திரியாக இருந்திருக்கிறார், என்பது வியப்பாக இருக்கிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## கலைஞரின் நினைவு புகழ் வணக்கம்



தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளில் (7-8-2025) பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில், பேரவை அலுவலகத்தில் அவரின் படத்திற்கு மாலையணிவித்துப் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

# புலம்பெயர்ந்தோர் தொழிலாளர்களே! வாக்காளர்கள் அல்லர்!!

## சிற்பி செல்வராசு

இந்திய ஒன்றியத்தின் தேர்தல் ஆணையம் ஒன்றிய அரசின் கைப்பாவையாகப் பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் என்ற பெயரில் ஏறத்தாழ 6.5 லட்சம் வாக்காளர்களின் பெயர்களை நீக்கி இருக்கிறது தேர்தல் ஆணையம். காரணம் அவர்கள் வெளியூரில் வேலை பார்க்கிறார்களாம்.

அந்த 6.5 லட்சம் வாக்காளர்களும் தமிழகத்தில்தான் புலம்பெயர்ந்த பணியாளர்களாக, கடைநிலை ஊழியர்களாக வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களின் வாக்குரிமை பீகாரில் பறிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின் வாக்கை தமிழ்நாட்டு வாக்காளர் பட்டியலில் சேர்த்து, இங்கே குழப்பம் விளைவிப்பதற்கு ஒன்றிய மோடிஅரசு தயாராகிவிட்டது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. தமிழ்நாடு மக்களின் நலனைக் காக்கின்ற திராவிட மாடல் அரசு சிறப்பாக நடைபெற்று வருவது ஒன்றிய அரசுக்கு உடன்பாடு இல்லாததாகத் தோன்றுகிறது. வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் பணியாளர்களாக இருக்கிறார்கள் என்றாலும், அவர்களுடைய வாக்குரிமை பீகாரில் இருக்கிறது, உத்தரப்பிரதேசத்தில் இருக்கிறது, உத்தரகாண்டில் இருக்கிறது, ராஜஸ்தானில் இருக்கிறது, குஜராத்தில் இருக்கிறது.

இந்த நிலையில் பீகாரைச் சேர்ந்த பெரும்பான்மையான வட மாநிலத்தவர்கள் இங்கே வேலைக்காக வந்தவர்களின் வாக்குரிமைகள் அங்கே பறிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அவர்களை எங்கே சேர்ப்பீர்கள் என்கின்ற கேள்வி எழுகிறது. தேர்தல் ஆணையத்திடம் இந்தியா கூட்டணியை சேர்ந்த 22 கட்சிகளும் இதேகேள்வியை முன்வைக்கின்றன. இது குறித்து தேர்தல் ஆணையம் பதில் சொல்லும் பொழுது அரசியல் சாசனத்தின் படி இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் குடியேறவும், வசிக்கவும் உரிமை இருக்கிறது, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 19 இன் படி அவர்கள் வாழும் பகுதியில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள உரிமையும் இருக்கிறது என்று என்று பொத்தாம் பொதுவாகச் சொல்கிறது. சட்டத்தின் உதவியை வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையத்தின்




மூலம் விளையாட்டைத் தொடங்கி இருக்கிறது ஒன்றிய மோடி அரசு. இந்த ஒன்றிய அரசின் இது போன்ற விளையாட்டுகளைத் தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு எவ்வாறு முறியடிக்கப் போகிறது என்பதுதான் இப்போது கேள்வியாக இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பணியாற்றி ஜிடிபி என்று சொல்லக்கூடிய வளர்ச்சி விகிதத்தில் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டிய ஒரேமாநிலமாக தமிழ்நாடு தான் இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் அரசியல் தெளிவானவர்கள்என்ற நிலையில், தமிழ்நாடு அரசுக்கு எந்தெந்த வகையில் இடையூறு செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம் கொடுக்கும் இடையூறில் இதுவும் சேர்கிறது. தேர்தல் ஆணையம், பாரதிய ஜனதா கட்சியின் ஒரு பிரிவாகவே மாறிவிட்டதோ என்கின்ற சந்தேகம் பெருகி வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் ஆறு லட்சம் பீகார் வாக்காளர்கள் இணைக்கப் படுவார்களோ, இதன் மூலம் தமிழர்களின் உரிமை பறிக்கப்படுமோ என்கிற அச்சம் எழுகிறது. அதனால் அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழரின் நலன் காக்கின்றமுறையில் அனைத்து அரசியல் கட்சி கட்சிகளும், சமூக அமைப்புகளும் போராடத் தயாராக முன்வர வேண்டும்.

இது தனிப்பட்ட கட்சி பிரச்சனையல்ல, ஒட்டுமொத்த தமிழர்களின், தமிழ்நாட்டின் மான, உரிமைப் பிரச்சனை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஒன்றிய அரசின் 'புறவழி அரசியலை' முடிவுக்குக் கொண்டு வருவார், அவர் பின்னால் அணிவகுப்போம், தேர்தல் ஆணையச் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிப்போம் !